


05.09.2022

## 9. நம் ‘சோதனையில்’ தள்ளாடவிடாத கர்த்தர்!

எனக்கு ஏன் இந்த சோதனை? என, கர்த்தரை அறியாதவர்கள் கேட்கலாம்!

ஆனால், கர்த்தரையும் அவரது உத்தமத்தையும் அறிந்தவர்கள், தங்களுக்கு நேர்ந்த சோதனையின் தெய்வ நோக்கத்தை அறிந்திருப்பார்கள்! 1கொரி.10:13 கூறுகிறபடி, 1) நேரிட்ட சோதனையின் மூலமாய் “என் ஆவிக்குரிய திராணியை” அறிந்து கொள்கிறேன்! “அட, எனக்கு இவ்வளவுதான் பொறுமையா? என்னிடம் இச்சை அடக்கம் இவ்வளவுதானா? சாந்த குணம் குறைவாய் உள்ளதே?” என தங்கள் திராணியை அறிந்து திருந்தி வளருவார்கள்! 2) என் திராணியை அறிந்த கர்த்தர் ‘அதற்கு மேல்’ என்னை சோதனையில் மூழ்கடிக்க விடமாட்டார் என விசுவாசிப்பார்கள்! கடல் அலைபோல் சோதனை தாக்கினாலும், சீறும் அலையைப் பார்த்து “இம்மட்டும் வா! மிஞ்சி வராதே! இந்த எல்லையில் அடங்கு” என கட்டளையிட்டு நிறுத்துவார்! (யோபு 38:11). 3) இவ்வாறு சோதனையின் நோக்கம் நிறைவேறிய பிறகுதான், சோதனையினின்று இரட்சிப்பையும் தந்து ஆதரிப்பார்! ஆம், தமக்குரியவர்களை சோதனையில் தள்ளாட விடமாட்டார்! அல்லேலூயா.

– ரத்னம்